**அட்டவணை II**

**இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் விபரமான புள்ளி வழங்கும் நடைமுறை**

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட தகைமைகள் தொடர்பில் மற்றும் அதற்குரித்தான சான்றிதழ்கள் மட்டுமே நேர்முகப் பரீட்சையின் போது கவனத்திற் கொள்ளப்படும். தொடர்புடைய சான்றிதழ்கள் உரிய வகையில் குறித்த காலப்பகுதியினுள் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

1. **தலைமைத்துவம் :** (பாடசாலை மற்றும் சமூக தலை மைத்துவம்) அதிபட்சம் - 15 புள்ளிகள்

1.1 பாடசாலை மட்டத்தில் :

| *புள்ளி வழக்கப்பட முடியுமான துறைகள்* | *அதிகபட்ச புள்ளி அளவு* |
|---|---|
| பாடசாலை மாணவத் தலைவர் | 05 |
| விளையாட்டுத் தலைவர் | 05 |
| சாரணர்/மாணவர் படையணி/ செஞ்சிலுவை ஆகிய குழுக்களின் தலைமைத்துவம் வகித்தல் | 05 |

1.1.1 பாடசாலை செயல்பாடுகள் / தலைமைத்துவத் திற்கான ஒரு பதவிக்கு ஒரு முறை மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும். ஒரு சங்கத்தில் பல சந்தர்ப்பங்களில் வெவ்வேறு பதவிகளை வகித்தல் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

1.1.2 பாடசாலைத் செயல்பாடுகள் அல்லது தலைமைத் துவம் பற்றி அதிபரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

1.1.3 ஒரு பதவிக்கு 05 புள்ளிகள் மாத்திரமே உரித்தாகும்.

1.1 **சமூக மட்டம் :**

| *புள்ளி வழக்கப்பட முடியுமான துறைகள்* | *அதிகபட்ச புள்ளி அளவு* |
|---|---|
| பிரதேச செயலகம்/மாவட்ட செயலகம் அல்லது அரச நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்ட அரசியல் சாராத அமைப்பு/ சங்கத்தின் முக்கிய பதவிகளுக்கு (தலைவர், செயலாளர், பொருளாளர்) | 05 |
| 05 ஒரு அறநெறிப் பாடசாலையில் குறைந்தபட்சம் ஒரு வருட காலம் ஆசிரியராக சேவையாற்றியிருத்தல். | 05 |

1.2.1 ஒரு சங்கத்தில் பல சந்தர்ப்பங்களில் அல்லது ஒரே நேரத்தில் பல பதவிகள் வகித்திருந்தால், ஒரு பதவிக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.

1.2.2 ஒரு பதவிக்கு 05 புள்ளிகள் மாத்திரமே உரித்தாகும்.

1.2.3 இந்தப் பதவிகளை வகித்ததாக சம்பந்தப்பட்ட பதிவு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அல்லது பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ இறப்பர் பதவி முத்திரையுடன் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

1.2.4 ஒரு வருடம் ஒரு அறநெறிப்பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றியிருத்தல். (பிரதேச செயலாளர் அல்லது பிரதேச செயலகத்தின் தொடர்புடைய உத்தியோகத்தரினால் அவரின் உத்தியோகபூர்வ இறப்பர் பதவி முத்திரையுடன் சான்றுப்படுத்துதல் வேண்டும்)

1.2.5 குறித்த அமைப்பு / சங்கம் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரசபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தாக பதிவுச் சான்றிதழ் அல்லது கடிதத் தலைப்பில் பதிவு செய்யப்பட்ட அதிகாரசபை மற்றும் பதிவு இலக்கத்தினைக் குறிப்பிட்டு சான்றுப்படுத்துதல் வேண்டும்.

2. **விளையாட்டுத்திறன்** : அதிகபட்சம் 05 புள்ளிகள் (பாடசாலை, பிரதேச/ மண்டல/ வலய மற்றும் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளுக்கு புள்ளி வழங்குதல், அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்கள்/ இளைஞர் சங்க விளையாட்டுப் போட்டி களுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். புத்தாண்டு விழாக்கள் போன்ற சந்தர்ப்பங்களில் நடைபெறும் விளையாட்டு நிகழ்வுகளுக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

- பெற்ற சாதனைகள், அந்த நேரத்தில் வழங்கப் படும் சான்றிதழ்களினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்பதோடு கடிதங்கள் மூலம் செய்யப்படும் உறுதிப்படுத்தல்கள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- ஒன்றுக்கொன்று வித்தியாசமான போட்டி களுக்கு தனித்தனியான புள்ளிகள் வழங்கப்படும்.
- ஒரு போட்டி அதன் அதிகபட்ச திறமைக்கு ஒரு முறை மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.
- முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங் களுக்கு மட்டுமே சாதனைகளாகக் கருதப்படும்.

2.1. **பாடசாலை :**

| *அடைவுகள்* | *புள்ளி அளவு* |
|---|---|
| பாடசாலை மட்டத்தில் (இல்ல விளையாட்டுப் போட்டி) சாதனை | 01 |
| பிரிவு மட்டத்தில் சாதனை | 02 |
| வலய மட்டத்தில் சாதனை | 03 |
| மாகாண மட்டத்தில் சாதனை | 04 |
| அகில இலங்கை மட்டத்தில் சாதனை | 05 |

2.2. **விளையாட்டுக் கழகம்/ இளைஞர் சங்கம் :**

| *அடைவுகள்* | *புள்ளி அளவு* |
|---|---|
| பிரதேச மட்டத்தில் சாதனை | 02 |
| மாவட்ட மட்டத்தில் சாதனை | 03 |
| மாகாண மட்டத்தில் சாதனை | 05 |
| தேசிய மட்டத்தில் சாதனை | 05 |

3. **மொழித் தேர்ச்சி :** அதிபட்சம் - 10 புள்ளிகள்

3.1 தாய்மொழிக்கு மேலதிகமாக, மற்றைய அரசகரும மொழி மற்றும் இணைந்த மொழித் தேர்ச்சிக்காக (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) வழங்கப்பட்டுள்ள பின் வரும் தேர்ச்சிகளுக்கு புள்ளிகள் உரித்தாகும்.

3.2 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனம் அல்லது மொழிக் கல்விக்கு பொறுப்பான அரச நிறுவனம்/ திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள சான்றி தழ்கள் மாத்திரம் கவனத்திற் கொள்ளப்படும்.

| *பரீட்சை / பாடநெறி* | *புள்ளி அளவு* |
|---|---|
| க.பொ.த. (சாதாரண தரம்) சிறப்புச் சித்திக்கு | 02 |
| க.பொ.த. (உயர் தரம்) சாதாரண சித்திக்கு | 04 |
| க.பொ.த. (உயர் தரம்) சிறப்புச் சித்திக்கு | 06 |
| 06 மாதங்களுக்கு மேற்பட்ட இடைக்காலப் பாடநெறிக்கு | 08 |
| 06 மாதங்களுக்கு மேற்பட்ட முழுநேரப் பாடநெறிக்கு | 10 |
| இணைந்த மொழியில் (ஆங்கிலம்) பட்டத்தைப் பெற்றிருத்தல் (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது உயர் கல்வி நிறுவனமொன்றினால் பெற்றுக் கொண்ட பட்டம் மாத்திரம் கவனத்திற் கொள்ளப்படும்.) | 10 |

4. **கணினி அறிவு :** அதிபட்சம் 10 புள்ளிகள்

| *பரீட்சை / பாடநெறி* | *புள்ளி அளவு* |
|---|---|
| க.பொ.த.(சாதாரண தரம்) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) பாடங்களுக்கான திறமைச் சித்திக்கு | 05 |
| க.பொ.த.(உயர் தரம்) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) பாடங்களுக்காக சாதாரண சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்திக்கு | 06 |
| 06 மாதங்களுக்கு மேற்பட்ட பாடநெறியின் இறுதியில் வழங்கப்படும் சான்றிதழ் / NVQ 03 அல்லது அதற்கு மேற்பட்ட தகைமைகள் | 10 |

- கணனிப் பாடநெறிக்கு புள்ளிகள் வழங்கும் போது, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம், பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனம் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மற்றும் வழங்கப்பட்ட நிறுவனத்தின் மேற்படி ஆணைக்கு ழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள செல்லுபடியாகும் காலத்தினுள் நிறைவு செய்யப்பட்டுள்ள பாட நெறிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்கள் மாத்திரம் கவனத்திற் கொள்ளப்படும்.

5. நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறமைகளுக்கு - அதிபட்சம் 10 புள்ளிகள்

- ஆளுமை மற்றும் தொடர்பாடல் திறன்களுக்கு நேர்முகப் பரீட்சையின் போது குழுவினால் புள்ளி கள் வழங்கப்படும்.

10-301